# உடன்பிறப்பே... 5

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த எஸ்.ஜே.சாதிக் பாட்சா அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

ஓவியம் : ரவிபேலட்



# சாதிக் பாட்சா...
# கழகம் காத்த தங்கத்தூண்!

**“கழகத்தின் வெற்றியிலும் தோல்வியிலும் சோதனையிலும் சாதனையிலும் கொடிய வெயிலிலும் நிழலிலும் கூடவே இருந்து அசையாத மலையாக, எதற்கும் ஊசலாடாத இதயத்துடன் எனக்குத் துணையாக இருந்த அந்தத் தங்கத் தூண் சாய்ந்து விட்டது!”** - சாகும் வரை கழகத்தின் வளர்ச்சிக்காகவே தன் உழைப்பைத் தந்த உடன்பிறப்பு எஸ்.ஜே.சாதிக் பாட்சா அவர்கள் மறைந்தபோது, தன் வலியை மேற்கண்ட வார்த்தைகளின் வழியே எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர். போராட்டப் புயலும், நெருக்கடி நெருப்பும் கழகத்தைச் சூழ்ந்து நின்ற பொழுதுகளில் எல்லாம் கலைஞரின் உடன்நின்ற கொள்கைமிகு உடன்பிறப்புதான் சாதிக் பாட்சா.

## உடுமலைப்பேட்டை உடன்பிறப்பு!

பேரறிஞர் அண்ணாவின் பேச்சு, அன்றைய சென்னை மாகாணத்தின் அரசியலைத் திக்குமுக்காட வைத்தது. அரசியல் என்பது நகரங்களுக்கும், உயர் வகுப்பினர், பண வசதி படைத்தோருக்கானது எனும் நிலையை மாற்ற, அண்ணா, தமிழ்நாடு எங்கும் கொள்கை விதையை விதைத்து வந்தார். அதன் விளைச்சலாக **‘உடுமலைப்பேட்டை சாதிக் பாட்சா’** கழகத்துக்குக் கிடைத்தார். அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் 1928- ஆம் ஆண்டு ஜூன் 5-ஆம் தேதி, இஸ்லாமிய சமூகத்தில் பிறந்தவர் சாதிக் பாட்சா. எப்போதும் சிறுபான்மையினர் நலன்காக்கும் கழகத்தில், அந்த சமூகத்திலிருந்து பிறந்து கழகப்பணியால் உச்சம் தொட்டார்.

இளம் வயதிலே திராவிட இயக்கக் கொள்கைகளின் தாக்கம் அவரை அரசியல் களத்துக்கு அழைத்து வந்தது. அரசியல் ஆர்வம் அவரை சட்டம் படிக்கவும் தூண்டியது. அதைத் தொடர்ந்து உழைக்கும் மக்கள் நிறைந்த வால்பாறையிலும், உடுமலைப்பேட்டையிலும் தொழிலாளர் சங்கங்களை உருவாக்கி நடத்தினார்.

## அண்ணா தேர்ந்தெடுத்த சாதிக்!


கழகம் வென்று, முதல் திராவிட மாடல் ஆட்சியை அமைத்த 1967-ஆம் ஆண்டு தேர்தலில், சாதிக் பாட்சாவுக்கு உடுமலைப் பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பை வழங்கி இருந்தார் அண்ணா. உதயசூரியனுக்கு தமிழ்நாடெங்கும் உறுதியான வெற்றி, உடுமலைப்பேட்டையிலும் சாத்தியமானது. வெற்றியைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்க 9 பேர் கொண்ட அமைச்சரவைப் பட்டியலை வெளியிட்டார் அண்ணா. அந்த அமைச்சரவையில் சுகாதாரத் துறை அமைச்சராக மக்கள் பணியை சாதிக் பாட்சா தொடங்கிய போது, நாற்பது வயதைக் கூட தொடாத இளைஞராக இருந்தார்.

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அப்போது அண்ணா தனக்கு அன்போடும், நம்பிக்கையோடும் அளித்த பொதுப்பணித்துறையை சாதிக் பாட்சாவுக்கு வழங்கினார் கலைஞர். அதன் பிறகு, 1971-ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக கலைஞர் தலைமையிலான அமைச்சரவை அமைந்தபோதும், சாதிக் பாட்சாவுக்கு பொதுப்பணித்துறை தொடர்ந்தது.

## பொறுப்பாளர் பொருளாளர்!

நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டிருந்த சமயம், தமிழ்நாடு மட்டும் தனித்தீவாகச் செயல்பட்டு வந்தது. காரணம், கலைஞர் தலைமையிலான தி.மு.கழகத்தின் ஆட்சி. அதை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், 1976-ஆம் ஆண்டு ஜனவரி 31-ல் தி.மு.க.வின் ஆட்சி கலைக்கப்பட்டது.

உடன்பிறப்புகள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்ட போதும், கழகத்தின் செயல்பாடுகள் குறைந்தபாடில்லை. அதற்குக் காரணமானவர்களில் ஒருவர் சாதிக் பாட்சா. அண்ணா காலத்தில், கழகத்தின் பொருளாளராக கலைஞர் இருந்து நிதி திரட்டி கட்டிய ‘அன்பகம்’, கழகத்தின் தலைமை அலுவலகமாகச் செயல்பட்டு வந்தது. அந்த அன்பகத்துக்குத் தலைமை அலுவலகப் பொறுப்பாளராக இருந்து கலைஞரின் கருத்துகளை உள்வாங்கி செயல்வடிவம் கொடுக்க உழைத்து வந்தார்.



**“அவரது உறுதி குலையாத கொள்கைப்பற்றை, இலட்சியப் பிடிப்பைப் பின்பற்றுவதே அவருக்கு நாம் செலுத்தும் இறுதி மரியாதை.”**

நாவலர் கழகத்திலிருந்து விலகி, **‘மக்கள் தி.மு.க’** எனும் அமைப்பை உருவாக்கிய சமயம். அடுத்த பொதுச்செயலாளராக பேராசிரியர் தேர்ந்தெடுக்கப்படுவார், என எதிர் பார்க்கப்பட்ட நிலையில், பேராசிரியர் வகித்த பொருளாளர் பொறுப்புக்கு யார் வருவார் என்ற எதிர்பார்ப்புக்குத் தீர்வளித்தது 1977-ஆம் ஆண்டு மே 15-ம் தேதி மதுரையில் நடைபெற்ற கழகத்தின் சிறப்பு மாநாடு. அப்போது செல்லூர் நந்தவனம் பகுதியில் கூடிய பொதுக்குழுவில் கழகத்தின் பொதுச்செயலாளராக பேராசிரியர் அவர்களும், கழகத்தின் பொருளாளராக சாதிக் பாட்சா அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அப்போது மட்டுமல்ல. அதைத் தொடர்ந்து 1982, 1986, 1992 ஆண்டுகளில் நடைபெற்ற தலைமைக் கழகத் தேர்தல்களில் எல்லாம் கழகத்தின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977-ஆம் ஆண்டு தொடங்கி, 1994-ல் இறக்கும் வரையில் கழகத்தின் பொருளாளராக 17 ஆண்டுகள் பணியாற்றினார். கழகத்தில் நீண்ட காலம் பொருளாளராகப் பொறுப்பாற்றியவர் சாதிக் பாட்சா அவர்கள்தான்.

## கலைஞரின் நம்பிக்கை

அவ்வப்போது அரங்கேறும் இந்தித் திணிப்பு முயற்சிகள், 1986- ஆம் ஆண்டில் மீண்டும் தலை காட்டத் தொடங்கின. **‘இந்தி வாரம்’** கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசு சுற்றறிக்கை அனுப்பியது. அதை எதிர்த்துப் போராடி கலைஞர், பேராசிரியர் போன்றோர் கைதாகினர். அப்போது கழகத்தின் அன்றாடப் பணிகளைக் கவனிக்க ஓர் நிர்வாகக் குழுவை அமைத்து, அந்தக் குழுவுக்குத் தலைவராக சாதிக் பாட்சா அவர்களை நியமித்தார் கலைஞர்.

13 ஆண்டுகளுக்குப் பிறகு 1989-ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சியை அமைத்தது கழகம். அந்த அமைச்சரவைப் பட்டியலிலும் தவறாமல் இடம் பிடித்தது சாதிக் பாட்சாவின் பெயர். ‘பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கிட தனிச்சட்டம்’, ‘மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகிதம் தனி இடஒதுக்கீடு’ என சமூக நீதித் திட்டங்களுக்கு எல்லாம் கலைஞர் சட்ட வடிவம் தந்த 1989 - ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், சாதிக் பாட்சாவுக்கு சட்டத்துறையை வழங்கி இருந்தார் கலைஞர். அது தன் **‘உடன்பிறப்பு சாதிக்’** மீது கலைஞர் வைத்திருந்த நம்பிக்கைக்குச் சான்று.

அத்தகைய கொள்கைமிகு சாதிக் பாட்சா, உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 1994-ஆம் ஆண்டு மே 12-ல் காலமானார். **“அவரது உறுதி குலையாத கொள்கைப்பற்றை, இலட்சியப் பிடிப்பைப் பின்பற்றுவதே அவருக்கு நாம் செலுத்தும் இறுதி மரியாதை”** என அவருக்கான இரங்கலில் பதிவு செய்தார் கலைஞர். சாதிக் பாட்சாவின் கொள்கை உறுதி, கழகப்பணியில் நமக்கான பாடம். அவரின் தியாகத்தை நெஞ்சில் ஏந்துவோம். **(துடிக்கும்...)**

## உயில்... உரிமை!

பேரறிஞர் அண்ணாவின் கொள்கை முழக்கங்களில் ஒன்று **‘மாநில சுயாட்சி’** ஆகும். அதுகுறித்து நிறையப் புத்தகங்கள் வந்தாலும் அவற்றுள் முக்கியமானது சாதிக் பாட்சா அவர்கள் எழுதிய **‘மாநில சுயாட்சி ஏன்?’** எனும் புத்தகம். மாநில சுயாட்சியின் வரலாற்றுப் பின்னணி, அரசியலமைப்பின் கூறுகள், அண்ணாவின் கருத்துகள், கலைஞரின் தொடர் முன்னெடுப்புகள் என அனைத்தையும் தொகுத்து, 120 பக்கங்களில் வழங்கி இருப்பார் சாதிக் பாட்சா. எழுதியதோடு மட்டுமல்ல அந்த உரிமைகளைக் காக்க கலைஞர் தலைமையில் தொடர்ந்து போராட்டக் களங்களையும் சாதிக் பாட்சா சந்தித்தார்.

“நமது மாநிலத்துக்கு அதிகமான நன்மைகள் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு தி.மு. கழகம் ‘மாநில சுயாட்சிக் கொள்கை’யை வலியுறுத்தி வருகிறது. மாநில சுயாட்சி என்பது தி. மு. கழகத்திற்குக் கொள்கை மட்டுமல்ல; அதன் நிறுவனர்-பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்த உயில் - உரிமைச் சாசனம் ஆகும்” என்று தன் புத்தகத்தில் எழுதினார் சாதிக் பாட்சா.

## நிறவெறியை தண்டித்த புலிட்சர்!




ஜார்ஜ் ஃப்ளாய்ட். கருப்பர் இனத்தைச் சேர்ந்த இவர், 2020-ல் அமெரிக்காவின் மின்ன சோட்டா நகரத்தில் காவல்துறை அலுவலர் டெரக் சாவின் என்பவரால் கழுத்தில் மிதிக்கப்பட்டுக் கொல்லப் பட்டார். காரணம், அங்கிருந்த கடை ஒன்றில் கள்ளநோட்டைப் பயன்படுத்தி யிருக்கலாம் என்ற குற்றச்சாட்டு.

தொடர்ந்து, அவரது மரணத்துக்கு நியாயம் கேட்டு மக்கள் வீதிக்கு வந்தார்கள். இறக்கும் தருவாயில் ‘ஐ கான்ட் ப்ரீத்’ (என்னால் சுவாசிக்க முடியவில்லை) என்று ஜார்ஜ் சொன்னார். அதுதான் அவரது கடைசி வார்த்தைகள். அவையே அங்கு நிறவெறிக்கு எதிரான போராட்டத்தில் முக்கியப் பங்காற்றின.

இந்த மரணம் பற்றி ‘வாஷிங்டன் போஸ்ட்’ பத்திரிகையைச் சார்ந்த பத்திரிகையாளர்கள் ராபர்ட் சாமுவேல்ஸ், தோலூஸ் ஒலோருனிப்பா ஆகியோர் மிக விரிவாக ஆராய்ந்து ‘ஹிஸ் நேம் இஸ் ஜார்ஜ் ஃப்ளாய்ட்’ என்ற தலைப்பில் 2022-ஆம் ஆண்டு புத்தகமாக வெளியிட்டனர்.

அந்தப் புத்தகத்துக்கு 2023-ஆம் ஆண்டுக்கான நான்-பிக்ஷன் பிரிவில் புலிட்சர் விருது, கடந்த மே 11-ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. 2020 மே மாதம் ஜார்ஜ் கொல்லப்பட்டார். இரண்டு ஆண்டுகள் கழித்து அதே மே மாதத்தில்தான், இந்தப் புத்தகமும் வெளியானது. தற்போது மீண்டும் அதே மே மாதத்தில் இந்தப் புத்தகத்துக்கு விருது கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது!

## ஃப்ளாஷ்பேக்



அமைச்சர் கே.ஏ.மதியழகன் அவர்கள் அண்ணா சிலையைத் திறந்துவைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்தார். இன்றைக்கு ‘அண்ணா சிலை பாயின்ட்’ என்று அழைக்கப்படும் அந்த இடம், சுற்றி இருக்கும் பகுதிகளுக்கு அடையாளமாகவே மாறிப்போனது.

**-ப.கதிரவன்,**
**அவைத்தலைவர்,**
**தாராபுரம், திருப்பூர்**
**தெற்கு மாவட்டம்.**

### அண்ணாவே அடையாளம்!



கதிரவன்

பேரறிஞர் அண்ணாவின் எதிர்பாரா மறைவுக்குப் பிறகு தமிழ்நாடு முழுக்க அண்ணாவின் சிலை அமைக்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1969-ஆம் ஆண்டு தாராபுரம் நகரச் செயலாளராக இருந்த என் தந்தை ஜோதி பழனிசாமி அவர்களது தலைமையில் அப்பகுதியில் சிலை அமைக்க ஒரு குழு ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சா தலைமையில், வருவாய்த்துறை


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சென்னை கோட்டை!

**1959-ஆம் ஆண்டு சென்னை மாநகர மன்றத் தேர்தல். கழகத்துக்குத் தேர்தல் அரசியல் புதிது என்பதால், ‘முழுவீச்சில் இறங்க வேண்டாம்’ என பேரறிஞர் அண்ணா கருதினார். ஆனால், ‘‘முழுவீச்சில் இறங்குவோம், வெற்றிக்கு உறுதி அளிக்கிறேன்’’ என அண்ணாவிடம் வாக்குறுதி அளித்தார் தேர்தல் பொறுப்பாளராக இருந்த கலைஞர். கழக வேட்பாளர்கள் 90 இடங்களில் போட்டியிட்டு, 45 இடங்களில் வெற்றி பெற்றனர். அதையடுத்து மேயர், துணை மேயர் பதவிகளையும் கழகத்தின் வசமாக்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 116




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131